# நகரமயமாக்கம் சுதேச கிராமிய பண்பாட்டில் ஏற்படுத்திய பாதிப்புக்கள்: கிழக்கிழங்கை மையப்படுத்திய ஆய்வு.

Effect of Urbanization on Folk Culture: A study based on Eastern Sri Lanka

வடிவேல் இன்பமோகன்[1]

## ஆய்வுச் சுருக்கம்

நகரமயமாக்கம் என்பது உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் செயற்பாடுகளில் ஒன்றாக அமைந்துள்ளது. நகரம் என்னும் பிரிகோடு மக்களை நகர வாசிகள், நகரவாசி அல்லாதோர் எனப் பாகுபடுத்துகின்றது. நகரங்கள் நவீன வாழ்க்கையையும் அதற்கான சூழலையும் கட்டமைத்து வழங்குகின்றன. மக்கள் வாழ்வதற்கான அத்தனை வசதிகளையும் உட்கொண்டவை என்னும் பிரமிப்பை மக்களுக்கு ஏற்படுத்துவதற்கேற்ற விதத்தில் கட்டமைக்கப்படுகின்றன. நகரங்களின் கட்டுமானம் சர்வதேச ரீதியின் அடிப்படையான சில வடிவமைப்புத் தன்மைகளைக் கொண்டனவாக விளங்கும். நகரங்கள் மக்களை கவர்ந்திழுப்பதால் நகரை நோக்கிய மக்களின் புலம்பெயர்வு நகரங்களின் வளர்ச்சியில் பாரிய பங்காற்றுகின்றது. இந்நகர மயமாக்கத்தால் மக்கள் பல நன்மைகளை பெற்றுக்கொண்டாலும் தீமைகளையும் ஏற்படுத்துகின்றது. இந்நிலையில் இவ்வாய்வின் நோக்கமாக நகரமயமாக்கலின் அடிப்படைகளைத் தெளிவுபடுத்தல், நகரமயமாக்கல் பாரம்பரிய பண்பாட்டில் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது என்பதைக் கண்டறிதல், பாரம்பரிய பண்பாட்டின் ஒரு கூறான கலைகளை எவ்வதம் பாதித்துள்ளது என்பதைக் கண்டறிதல் ஆகியவற்றை நோக்காக் கொண்டிருக்கும். இவ்வாய்வு சமூகம் அதன் பாரம்பரிய பண்பாடு, பண்பாட்டின் ஒரு கூறான கலைகளுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் ஆகியவை தொடர்பான ஆய்வாக விளங்குவதால் பண்புசார் ஆய்வு முறையியல் பின்பற்றப்படும். இந்நிலையில் இந்த ஆய்வுவின் மூலம் நகரமயமாக்கத்தால் பாரம்பரிய பண்பாடு பண்பாட்டின் ஒரு கூறான கலைகள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பது தெளிவுபடுத்தப்படும்.

**திறவுச் சொற்கள் :** பண்மைப் பண்பாடு, பாரம்பரிய கலை, கிராமிய வாழ்வு, சமூக மரபுகள், சமூக முரண்பாடு.

[1]பேராசிரியர் வ.இன்பமோகன், நுண்கலைத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. மின்னஞ்சல்: *inpamohanv@esn.ac.lk*

## அறிமுகம்

நகரங்கள் மக்களுக்குத் தேவையான வசதிகளையும் கொண்டனவாக வளர்ச்சியடைவதும் நகர வாழ்வை நோக்கி மக்கள் புலம்பெயர்வதும் சர்வதேச ரீதியில் இன்று இடம்பெற்றுக் கொண்டிருக்கும் மாற்றங்களில் ஒன்றாகும்.

நகரமயமாக்கத்தால் பல அனுகூலங்கள் ஏற்படுவது போன்று பிரதிகூலங்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. சர்வதேச ரீதியில் நகரமயமாக்கத்தால் மக்கள் பல பிரச்சினைகளை சமகாலத்தில் எதிர்கொள்கின்றனர். இது இலங்கைக்கும் விதிவிலக்கானதல்ல. இந்த ஆய்வு நகரமயமாக்கத்தால் சுதேசிய பண்பாடு, கலைகள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றது என்பது பற்றியும் அதனால் ஏற்பட்ட சாதக பாதக நிலைமைகள் பற்றியும் கிழக்கிழங்கையை ஆய்வுப் பிரதேசமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.

## நகரமயமாக்கம்

கிராமப்புறப் பகுதிகளில் இருந்து மக்கள் புலம்பெயர்வதால் நகரங்கள் (Towns), தலைநகரங்கள் (Cities) வளர்ச்சியடைவதை நகரமயமாக்கல் (Urbanization) என்னும் பதம் சுட்டிநிற்கின்றது. தொழிலைத்தேடிச் செல்லல், சிறந்த வாழ்க்கைய உருவாக்கிக் கொள்ளல் ஆகிய நோக்கங்கள் நகரங்களை நோக்கிய இடம்பெயர்வில் முக்கிய தாக்கம் செலுத்துகின்றன. நாடு நவீன அபிவிருத்தியை நோக்கி செல்லும் போது நகரங்கள் மக்களுக்குத் தேவையான அத்தனை வசதிகளையும் கொண்டனவாக கட்டமைக்கப்படுகின்றன. வரலாற்றுரீதியாக நோக்கும் போது நகரமயமாக்கமானது குறிப்பாக பொருளாதார சமூக மாற்றங்களுடன் தொடர்புடையதாகவே அமைந்திருந்தது.

வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் நகரமயமாக்கம் இரு பிரதான காரணங்களால் ஏற்படுகின்றது. 1.இயற்கையாக நகரங்களில் ஏற்படும் மக்கள் தொகை அதிகரிப்பு, 2.கிராமப்புறங்களில் இருந்து ஏற்படும் நகரை நோக்கிய மக்கள் இடப்பெயர்வு. இரண்டாவது வகைப்பாட்டுடன் தொடர்படைய நகரமயமாக்கச் செயற்பாடே சமகாலததில் முனைப்புப் பெற்றுள்ளது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலுள்ள கிராமப்புற மக்கள் சிறந்த வாழ்வாதாரத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்னும் நோக்கத்துடன் நகரத்தை நோக்கி புலம்பெயர்கின்றனர். இதனை ‘இடப்பெயர்வு’ (Migration) என்று குறிப்பிடலாம். நகரங்களில் அதிகமான தொழிற்சாலைகள், கல்விநிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதால் உயர்தரத்தினாலான கல்வி, சிறந்த தொழில்பயிற்சி, வேலைவாய்ப்பு என்பனவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இலங்கையில் நகரமயமாக்கம் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோற்றம்பெற்றதாக அறிஞர்கள் குறிப்பிடுவர் (புஷ்பரட்ணம்,ப.,2017:52-53). கி.மு.3ஆம் நூற்றாண்டிற்கு

முன்னரே இலங்கையில் நகரமயமாக்கம் ஏற்படுத்தப்பட்டு விட்டது என்பதை ஆதாரப்படுத்துகின்றார் ப.புஷ்பரட்ணம் (மேலது : 54). அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சியுடன் குறித்த பிரதேசம் பலரையும் (உள்நாட்டு, வெளிநாட்டவர்) கவர்ந்திழுக்கும் வளங்களையும் வசதிகளையும் கொண்டதாக கட்டமைக்கப்படும் போது அது நகரமயமாக்கத்திற்கான அடிப்படைகளை உருவாக்கும் என்பதையும், நகர மயமாக்கச் செயற்பாடு பல்பண்பாட்டு சங்கமிப்பை ஏற்படுத்தும் என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தார். வர்த்தகம் ஏனைய காரணங்களுடன் தொடர்புடையதாக வெளிநாட்டு தொடர்புகள் பேணப்படுதல் நகரமயமாக்கத்தில் தாக்கம் செலுத்தும் காரணிகளில் ஒன்றாக அடையாளப்படுத்துகின்றார். குறித்த பிரதேசத்தில் உள்ளடங்கியிருக்கும் வளங்கள், தொடர்பாடல் வலையமைப்பு நகராக்கத்தில் அடிப்படையானதாக அமைவதுடன் அவற்றை அடிப்படையாகக் கொண்டே நகரம் கட்டமைக்கப்படும். பாரம்பரிய சமூகங்களில் நகராக்கச் செயற்பாடு சுதேச மன்னர்களின் ஆட்சியின் கீழ் மேற்கொள்ளப்பட்டதால் அங்கு சுதேச பண்பாடு மற்றும் உற்பத்தி முறைகளுக்கு முதன்மையளிக்கப்பட்டிருந்தது.

காலனித்துவ ஆட்சியின் பின்னர் இலங்கை மக்கள் புதியதொரு சமூக, பொருளாதார, பண்பாட்டு, அரசியல் வெளிக்குள் உள்ளீர்க்கப்படுகின்றனர். காலனித்துவ ஆட்சியாளர்களின் புதிய அரசியல், பொருளாதார, பண்பாட்டுக் கொள்கைகளின் பிரதிபலிப்பாக காலனித்துவ நகரங்கள் கட்டமைக்கப்பட்டன. இந்நகரங்களை நவீனப்படுத்தப்பட்ட நகரங்களாக அமைந்திருந்ததுடன், சர்வதேச தர நிர்ணயங்களைப் பேணத்தக்க விதத்தில் அவை வடிவமைக்கப்பட்டன. காலனித்துவ ஆட்சியாளர் அவர்களின் ஆட்சிக்குட்படுத்தப்பட்ட பிரதேசங்களை இணைக்கும் மத்திய நிலையங்களை நகரங்களாக கட்டமைத்தனர். இந்நகரங்களில் இருந்துகொண்டு அதிகாரிகள் நிர்வாகப் பணிகளை மேற்கொண்டனர். நகரங்களில் கிறிஸ்தவ தேவாலயம், கல்வி நிறுவனங்கள், அரச நிறுவனங்கள், வங்கி, வியாபாரத் ஸ்தளங்கள், நீதிமன்றங்கள், களியாட்ட நிலையங்கள், தொழிற் பேட்டைகள், வர்த்தக மையங்கள், உயர் தரத்திலான வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்கள் என மக்களின் அத்தனை வசதிகளையும் ஒரே இடத்தில் பூர்த்திசெய்யக்கூடியனவாக காலனித்துவ ஆட்சியில் நகரங்களை வடிவமைத்தனர். சிறந்த வீதிப் போக்குவரத்து வசதிகள், பாரம்பரிய உணவுப் பண்பாட்டில் இருந்து மாறுபட்ட உணவுப் பழக்கம் என்பவற்றால் நகரங்கள் மக்களை ஈர்க்கும் தன்மையுடையனவாக அமைந்திருந்தன.

நகர உருவாக்கச் செயற்றிட்டத்தில் நகரங்களின் வளர்ச்சியில் காலனித்துவ அரசு அக்கறையுடன் செயற்பட்டதில் பின்வரும் காரணிகள் செல்வாக்குச் செலுத்தின.

1. காலனித்துவத்திற்கு உட்படுத்தப்பட்ட நாடுகளில் காலனித்துவ பொறிமுறையை சிறப்பாக மேற்கொள்வதற்கு அவசியமானதாக கருதப்பட்டது.
2. ஐரோப்பிய நாடுகளில் இருந்து நிர்வகிப்பதற்காக காலனித்துவ நாடுகளுக்கு வந்திறங்கிய காலனித்துவ அதிகாரிகளின் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான செயற்றிட்டமாக அமைந்திருந்தது.

3. காலனித்துவ மயமாக்கலின் ஓர் அடிப்படை அம்சமாக நகரங்களையும் அதில் வாழும் மத்தியதர வர்க்கத்தினரையும் உருவாக்குதல்.
4. காலனித்துவ ஆட்சியாளர்களின் பொருளாதார கொள்கையின் அடிப்படையாக இருந்த ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தை சிறந்த முறையில் மேற்கொள்ளல் என்பனவாகும்.

காலனித்துவ ஆட்சியில் இருந்து இலங்கை 1948இல் சுதந்திரத்தினைப் பெற்றுக் கொண்டாலும் நகர அபிவிருத்தியில் காலனித்துவத்திற்கு பின்வந்த அரசுகள் பெரியளவான மாற்றங்கள் எவற்றையும் ஏற்படுத்தவில்லை.

## கிழக்கிலங்கையின் பாரம்பரிய சமூகம்

ஆட்சியாளர்களின் திட்டங்களும் செயற்பாடுகளும் மக்கள் வாழ்வில் பாதிப்பினை ஏற்படுத்தும் முக்கிய காரணிகளாகவுள்ளன. கிழக்கிலங்கை மக்கள் சுதேசிய மன்னர்களின் ஆட்சியதிகாரத்தின் கீழ் ஆரம்பகாலத்திலிருந்து வழிநடத்தப்பட்டனர். ஆட்சியாளர்களும் மக்களும் ஓரே பண்பாடு, சமய, சமூக, பின்புலத்தில் செயற்பட்டதால் மக்களின் வாழ்வியல் அம்சங்களை குறையுமின்றிப் பேணுவதற்கேற்றமுறையில் ஆட்சியதிகாரம் அமைந்திருந்தது.

தமிழர் வாழும் பிரதேசங்களைப் பொறுத்தவரை கிராமங்கள் ஒவ்வொன்றும் மக்கள் வாழ்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகளைக் கொண்டனவாகவும், சுதேசிய தன்னிறைவுப் பொருளாதாரத்தைக் கொண்டனவாகவும், தனித்துவமான பண்பாட்டு மரபுகளைக் பேணுவனவாகவும் விளங்கின. கிராமிய வாழ்வில் சாதி மற்றும் சமூக மரபுகளை கொண்ட சமூக ஒழுங்கு கடைப்பிடிக்கப்பட்டது. சாதிரீதியாக இருந்த தொழிற் பிரிப்பு அன்றைய சமூக இயக்கத்தின் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இவை கிராமிய வாழ்வின் அடிப்படையாக அமைந்திருந்தன.

## நகரமயமாக்கமும் அதன் பாதிப்புக்களும்

நகர உருவாக்கம் பற்றிய செயற்றிட்டங்கள் இலங்கையில் சுதேசிய ஆட்சியாளர்களினாலும் மேற்கொள்ளப்பட்டாலும் காலனித்துவ ஆட்சியின் பின்னரே நகரமயமாக்கம் மக்கள் வாழ்வில் பாதிபை ஏற்படுத்துகின்றது. காலனித்துவத்திற்கு உட்படுத்திய நாடுகளில் இருந்து பொருளாதார நன்மைகளைப் பெற்றுக் கொள்வது காலனித்துவ ஆட்சியாளர்களின் நோக்கமாக விளங்கியது. அதற்காக அவர்கள் உருவாக்கிய செயற்றிட்டங்கள் நீண்டகாலப் பயனைத் பெறக்கூடியவிதத்தில் அமைந்திருந்தன. மதப்பிரசாரம், மதப்பிரசாரத்தை இலகுபடுத்தும் மிசநெறிப் பாடசாலைகள் அவற்றினூடாக அளிக்கப்பட்ட ஆங்கில மொழியை பிரதானப்படுத்தும் ஐரோப்பிய கருத்தியலை முதன்மைப்படுத்தும் கல்வி என்பன சுதேசிகளை ஐரோப்பிய பண்பாட்டு மரபிற்குள் உள்ளீர்ப்பதற்கான செயற்பாடுகளாக அமைந்திருந்தன. கிறிஸ்தவத்திற்கு மாறுதல், ஆங்கில மொழிக் கல்வி என்பன அரச உத்தியோகம்,

சமூகத்தில் உயர் சமூகக்குழுக்களை உருவாக்கும் ஒப்பந்த வேலை, வர்த்தகம், ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்தி என்பனவற்றுடன் தொடர்புடைய பொருளாதார நன்மைகளைப் ஏற்படுத்தும் என்று சுதேசிகளில் சிலர் உணர்ந்து அந்நோக்கத்தை அடைவதற்கேற்ற விதத்தில் செயற்பட்டனர். நகரங்களில் வாழும்போது இவை சாத்தியப்படக்கூடியவை என்னும் நோக்கு சுதேசிகளிடம் காணப்பட்டது.

நகராக்கத்தில் கவனஞ்செலுத்திய காலனித்துவ அரசு பாரம்பரிய வாழ்க்கை மற்றும் கிராமியப் பொருளாதாரத்தை பலவீனப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. பாரம்பரிய பொருளாதாரத்தின் அடிப்படையாக விளங்கிய பல உற்பத்திகளை இல்லாதொழித்து அவர்களுக்கு இலாபம் கிடைக்கும் ஏற்றுமதி பொருட்களின் உற்பத்தியின்பால் மக்களைத் திசைதிருப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எடுத்துக்காட்டாக உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் அரிசியைவிடக் குறைந்த விலையில் அரிசியை இறக்குமதி செய்து உள்ளூர் அரிசி உற்பத்தியை குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டனர் (குணசிங்கம், முருகர், 2016:290). இவ்வாறான காலனித்தவ அரசின் இறக்குமதிக் கொள்கையால் பல உள்ளூர் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டனர். இறக்குமதிப் பொருட்கள் உள்ளூர் உற்பத்தியாளர்களின் பொருட்களைவிட குறைந்தவிலையில் விற்பனை செய்யப்பட்டதுடன் மக்களைக் கவர்ந்திழுக்கும் வியாபார நுட்பங்களையும் கொண்டிருந்தனர்.

கிராமிய வாழ்வின் அடிப்படைகளைச் சிதைக்கும் வகையில் காலனித்துவ அரசால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள் கிராம மக்கள் பாரம்பரிய பொருளாதார ஈட்டங்களில் ஈடுபடுவதற்கு தடைகளை ஏற்படுத்தின. இது தொடர்பாக ஆ.சிவசுப்பிரமணியம் விவாதிப்பார் (2017:162). இந்நிலைமை பாரம்பரிய தோல்வாத்தியங்களை உருவாக்குவோர், காட்டு தொழில்களில் ஈடுபட்ட பூர்வீக குடி மக்கள் போன்றோரை பெருமளவு பாதித்தது. இருந்தும் காலனித்துவ ஆட்சியாளர்கள் தங்களுக்கு இலாபம் தரக்கூடிய உள்ளூர் பொருளாதர உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு பின்னிக்கவில்லை. எடுத்துக்காட்டாக இலங்கையில் பாரம்பரியமாக மேற்கொள்ளப்படும் உற்பத்திகளான நெசவுக் கைததொழில், சாயவேர் உற்பத்தி, சாயம் தயாரித்தல் போன்றன வெளிநாட்டுச் சந்தையில் அதிக இலாபத்தினை ஈட்டிக் கொடுப்பதால் இவ்வாறான உற்பத்திகளை அதிகரிப்பதற்கு காலனித்துவ ஆட்சியாளர் அதிக அக்கறை செலுத்தினர். காலனித்தவ ஆட்சியாளர் ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்திக்கு (தேயிலை, இறப்பர், ஏலம், கறுவா போன்றன) முக்கியத்துவம் வழங்கியதுடன் காலனியாதிக்க நாடுகளின் விற்பனைச் சந்தையாகவும் காலனித்தவ நகரங்களைப் பயன்படுத்தினர். இவை காலனித்தவ அரசின் பொருளாதார நன்மையை அடிப்படையாகக் கொண்ட திட்டங்களாக அமைந்திருந்தன.

காலனித்தவ ஆட்சில் தொழிலை இழந்த சுதேசிகள் நகரை நோக்கிப் புலம்பெயர்ந்து கல்வி, கல்வியினூாக ஏற்படக்கூடிய தொழில்வாய்ப்பு ஆகியவற்றின் ஊடாக

மேற்படுத்த முயற்சித்தனர். பாரம்பரிய சமூகத்தில் கல்வி என்பது தொழில்சார்ந்ததாகவே இருந்தது. தொழில்த்திறன்கள் முதியவர்களினால் இளந்தலைமுறையினருக்குக் கற்றுக்கொடுக்கப்பட்டது. இதனை கணபதி ஸ்தபதி சிற்பக் கல்வி தொடர்பாக கீழ்கண்டவாறு குறிப்பிடுவார். ''சிற்பக்கலை தொண்டுதொட்டு தந்தை மகனுக்கும் பின் அவன் தன் மகனுக்குமாக வழிவழியாக கற்பிக்கப்பட்டு பயின்றுவரப்பெற்ற கலை. தந்தையின் கலைக்கூடமே மகனின் கலை பயிலும் சாலை. பகலில் தொழிற்பயிற்சியும் இரவில் நுற்பயிற்சியும் நிகழும்'' (2001:vii). திண்ணைப்பாடசாலை என்னும் அமைப்பின் ஊடாக மதம்சார்ந்த கல்விமுறை போதிக்கப்பட்டதற்கான சான்றுகளும் உள. கல்வி, தொழில் என்பன சாதிசார்ந்த விடயமாகவே பாரம்பரிய சமூக அமைப்பில் அமைந்திருந்தது.

சமூக வேறுபாடுகள் இன்றி சகல மக்களும் ஆங்கிலக் கல்வியை கற்பதற்கான வாய்ப்புக்கள் காலனித்துவ நகரங்களில் உருவாக்கப்பட்டன. இக்கல்வி அரச உத்தியோகத்தை வழங்கியது. அரச உத்தியோகத்தின் மூலம் வழங்கப்படும் வருமானம் மக்களைத் திருப்திப்படுத்துவதாக அமைந்திருந்தது. கிராமிய வாழ்வில் பருவகால மாற்றங்களுக்கு ஏற்ப தொழில் செய்யும்நிலை மாறி நகரில் அறிமுகப்படுத்தப்பட்ட வியாபாரம், ஒப்பந்த வேலை, கூலிவேலைகள் போன்ற வருமானத்தை எக்காலத்திலும் தரக்கூடிய தொழில்களில் ஈடுபட்டனர். பாரம்பரிய தொழில் முயற்சிகளில் அவர்கள் எதிர்நோக்கிய அபாய நேர்வுகள் நகரத்தில் பெற்றுக்கொண்ட தொழிலில் இல்லாதிருந்தது. பாரம்பரிய சமூக இயக்கத்தில் இருந்த சாதியின் தாக்கம் நகர வாழ்வில் தொழில், கல்வி என்பவற்றில் இல்லாதிருந்தது. குறித்த சமூகப் பிரிவினர் குறித்த தொழிலுடன் மட்டுப்படுத்தப்பட்ட நிலைமை மாற்றமடைந்தது. பாரம்பரிய சமூகத்தில் சாதியை அடிப்படையாகக் கொண்டு இருந்த சமூக ஏற்றத்தாழ்வை நகரத்தில் பொருளாதாரம் தீர்மானித்தது. சமூகத்தில் கீழ் நிலையில் இருந்தவர்களும் பொருளாதார பலமுள்ளவர்களாக மாற்றமுறுகின்றனர். இது சாதி ரீதியாக கீழ்நிலைப்படுத்தப்பட்டோர் மேன்நிலையாக்கம் பெறுவதற்கு வாய்பாக அமைகின்றது.

நகரமயமாக்கத்தால் பாரம்பரிய கிராமிய வாழ்வின் அடிப்படையாக இருந்த சாதி, சமூக ஒழுங்குகள் செயலிழந்தமை குறிப்பிடத்தக்கது. இது பாரம்பரிய சமூக இயக்கத்தையும் சமூக ஒழுங்கையும் மாற்றியமைத்து புதிய வகுப்பினரை சமூகத்தின் உயர்நிலைக்குக் கொண்டுவந்தது. திறன், பொருளாதார, அரசியல் பலம் உள்ளவர்கள் சமூகத்தில் உயர்நிலையில் மதிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுகின்றது. ''19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் பெரும்பாலும் மிஷனரிக் கல்விச் செயற்பாடுகளாலும், மதப் பிரச்சாரத்தினாலும், விடுதிப் பாடசாலைகளினாலும் மாத்திரமன்றி நவீன வர்த்தகச் செயற்பாடுகளினாலும் ஏற்பட்ட பொதுவான பொருளாதாரச் செழிப்பினாலும் சாதியம்

சிறிதளவு ஒழியவே செய்தது'' (2016:301) என இதனை முருகர் குணசிங்கம் குறிப்பிடுவார்.

நகரமயமாக்கம் அறிமுகப்படுத்திய வாழ்வியல் கட்டமைப்பு பல இனங்களும் செறிந்தும் கலந்தும் வாழும் தன்மையுடய ஒரு கலப்புச் சமூகத்தையே கட்டமைத்தது. இந்த நகரவாழ்வு பாரம்பரிய வாழ்வியல் அம்சங்கள் சிலவற்றுடன், நகரவாழ்வு அறிமுகப்படுத்திய காலனித்துவ வாழ்வியல் அம்சங்களையும் அடிப்படையாகக் கொண்ட புதிய கலப்புப் பண்பாட்டை உருவாக்கியது. இது பாரம்பரிய பண்பாடு போன்று அன்றி உறுதியற்ற பண்பாடாகவும், நகரவாழ்வில் இணைந்துள்ள எந்த சமூகக் குழுக்களாலும் சொந்தம் கொண்டாடமுடியாத ஒன்றாகவும் உருவாக்கப்பட்டிருந்தது. இதனால் நகர சமூக அமைப்பில் கலப்புத் திருமணங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகின்றது. பாரம்பரிய சமூக அமைப்பில் பல சாதியைச் சோந்தவர்களும் கலந்து வாழ்வதற்கான வாய்ப்புக்கள் இல்லாதிருந்ததால் சாதித்திருமணங்கள் முக்கியத்துவம் பெற்றன. பெற்றோர்களின் விருப்பம், திருமண ஒப்பந்தம் என்பன திருமணத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தன. பாரம்பரிய சமூக அமைப்பில் பெண்கள் ஆண்களுக்கு கட்டுப்பட்டு வாழ்வது சமூக வழக்காகவும் பண்பாட்டு மரபாகவும் மதிக்கப்பட்டது. நகர சமூகத்தில் ஆண்-பெண் சமத்துவம் பற்றிய சிந்தனைகள் மேலெழுவதுடன் அது செயல்வடிவம் பெறுகின்றது. பெண்கள் கல்வி, அரச உத்தியோகம், குடும்ப வருமானத்தில் முக்கிய இடம் வகித்தல் ஆகியவற்றால் பெண்களும் குடும்ப அமைப்பின் முக்கியத்துவம் பெறுகின்றனர். பெண்களுக்கான சுதந்திரம், குடும்பத்தில் முக்கிய உறுப்பினராக மதிக்கப்படல் என்பவற்றால் காதல் திருமணம் நகர சமூகத்தில் தவிர்கமுடிாததாக உள்ளது. இதனால் விரும்பிய ஆடவரை மணம்புரிவதற்கான தடைகள் குறைவடைகின்றன. பாரம்பரிய மரபுகளில் பற்றுடையோர் பாரம்பரிய சமூகத்தில் கடைப்பிடித்த சமூக இறுக்கத்தை நகர சமூகத்திலும் கடைப்பிடிக்க முயற்சித்தாலும் நகர சமூகத்தில் சட்டம், நீதி ஆகியன பலமானதாக விளங்குவதால் குடும்ப உறுப்பினர்களால் கலப்புத் திருமணத்திற்கு முழுமையாக தடைவிதிக்க முடியாதுபோனது. சாதி, திருமணத்திற்கான தகுதிப்பாடாக இருந்த இடத்தில் அரச உத்தியோம், பொருளாதார பலம் என்பனவற்றை கருத்திற்கொள்கின்றனர். கலப்புத் திருமணம் சமூக முரன்பாடுகளும் பிரச்சினைகளும் ஏற்படுவதற்கும் காரணமாகின்றது. இப்பிரச்சினை இன்று ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினையாகவும் உருவெடுத்துள்ளது சுட்டிக்காட்டத்தக்கது. திருமண விடையத்தில் காட்டப்பட்ட இந்த எடுத்துக்காட்டுப் போன்று நகர வாழ்வில் பல விடயங்களிலும் பாரம்பரிய சமூக (சாதி) நியமங்கள் மீறப்பட்டு இளைஞர், யுவதிகள் சுதந்திரமாக செயற்படுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கின்றது.

இருந்தும் நகர வாழ்வின் மூலம் வாழ்வின் அத்தனை தேவைகளையும் பூர்த்தி செய்யமுடியும் என்னும் கற்பனையுடன் கலந்த மக்களின் எதிர்பார்க்கை மக்கள்

வாழ்வில் வேறு சில பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது. வேலைவாய்ப்பு இன்மை, அடிப்படை வசதிகளைக் கூடப் பூர்த்தி செய்யக்கூடிய வாழ்விடத்தை ஏற்படுத்த முடியாத நிலைமை, வாழ்விடம் ஒன்றை நகரச் சூழலில் ஏற்படுத்த வேண்டும் என்னும் வேட்கையால் வாழ்வதற்கு பொருத்தமற்ற புறம்போக்கு நிலப்பகுதிகளில் குடியமர்தல், வாழ்வாதாரத்திற்குப் பொருத்தமற்ற சேவைகள், உட்கட்டுமான வசதிகள் கிடைக்காமை, போதுமான சுகாதார வசதி மற்றும் கல்வியைப் பூர்த்தி செய்ய முடியாமை, உயர்ந்தளவிலான சனத்தொகை நகரங்களில் காணப்படலும் சனநெரிசலால் உருவாக்கப்படும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் என்பன இன்று நகரவாழ்வில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளாக உள்ளன.

பாரம்பரிய வாழ்வு, பண்பாடு, பொருளாதாரம் ஆகிய அம்சங்களில் மாற்றத்தை ஏற்படுத்தி புதியதும் மக்களுக்கு அன்னியமான பல்வேறு விடயங்களை அறிமுகப்படுத்துவதாக நகரமயமாக்கல் செயற்பாடு அமைகின்றது. இதன் மூலம் பாரம்பரிய சமூக அமைப்பின் ஒழுங்குகள் பல இல்லாது செய்யப்படுகின்றன / பலமற்றதாக்கப்படுகின்றன. இது பாரம்பரிய சமூக அமைப்பில் உயர்நிலையில் இருந்தவர்களுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. அதேவேளை கீழ்நிலையில் இருந்தவர்கள் சாதியடிமைத்தனத்தில் இருந்து வெளிவருவதற்கான சில வாய்ப்புக்களை ஏற்படுத்துகின்றது (கல்வி, தொழில் சார்ந்த சுதந்திரம் இவ்விடயத்தில் சுட்டிக்காட்டத்தக்கது). பாரம்பரிய சமூகத்தில் மதிக்கப்பட்ட ''போடி'' அவரின் சமூகத் தனித்தவத்தை இழக்கின்றார். அவனுக்கு கட்டுப்பட்டு தொண்ரூழியம் செய்த சிறைக்குடிகள் மேன்நிலையாக்கம் பெறுகின்றனர். இருந்தும் நகரை நோக்கிய நகர்வில் இவ்விரு (ஆதிக்கம் செலுத்திய சமூகம், அடிமைப்படுத்தப்பட்ட சமூகம்) சமூக்குழுவினரும் ஆர்வமாகவே உள்ளனர்.

## நகரமயமாக்கமும் பாரம்பரிய கலை, கைவினைச் செயற்பாடுகளும்

கிழக்கிலங்கை மக்களிடம் பாரம்பரிய நிகழ்த்துகலை வடிவங்கள், கைப்பணி மரபு என்னும் இரண்டும் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றிருந்தன. வடமோடி தென்மோடிக் கூத்துக்கள், வசந்தன் கூத்து, பறை மேளக் கூத்து, கும்மி, கரகம் என்பன இம்மக்களிடம் முனைப்புப் பெற்றிருந்த நிகழ்த்துகலை வடிவங்களாகும். கைப்பணி மரபாக மட்பாண்டக் கைத்தொழில், வெண்கல வார்ப்புக் கைத்தொழில், பிரம்பு, பனை ஓலை, தும்பு, பன் மற்றும் ஏனைய புல்வகைகளை மூலப்பொருட்களாகக் கொண்ட கைப்பணி மரபு, ஆடைக் கைத்தொழில், பொற்கொல்லரால் மேற்கொள்ளப்படும் நகை உற்பத்தி, கம்மாளரால் மேற்கொள்ளப்படும் இரும்பாலான பொருள் உற்பத்தி என பல கைவினை மரபுகள் வழக்கில் இருந்தன. இங்கு குறிப்பிட்ட கலை கைப்பணி மரபுகளில் அனேகமானவற்றின் திறன்களும் பயில்வும் சாதியை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படடு வந்தன. குறித்த சாதியினரே குறித்த கலை, கைப் பணிப் பொருட்களை உற்பத்தி செய்பவர்களாகவும் அவற்றை நிகழ்த்தும் உரிமம் பெற்றவர்களாகவும் விளங்கினர். பாரம்பரிய கலைகளில் சாதி செயற்படும் நிலை தொடர்பான ஒரு கூத்துக்கலைஞர்

‘‘எங்கட ஆக்கள் மட்டுந்தான் எங்கட கூத்தில ஆடுறது. வேறு ஆக்களைச் சேர்க்கவும் மாட்டம் அவை கேட்டாலும் சொல்லிக் குடுக்கவும் மாட்டம். இது எங்கட சொத்து. கூத்தை வேறு ஆட்களுக்குப் பழக்கி விட்டால் அவர்கள் தங்கட என்று உரிமை கோரவும் முற்படுவர். கூத்து எங்கட ரத்தத்தில ஊறினது’’ (ஜெயசங்கர்,சி.,2011). இதுபோன்று தொழில்நுட்ப அறிவு பாரம்பரிய இந்திய சமூகத்தில் குறித்த சாதிக்குரியதாக அமைந்திருந்ததை இ.முத்தையா குறிப்பிடுவார் (2010:181).

அனேகமாக கலை, கைப்பணி மரபுகள் அம்மக்களின் வாழ்வாதாரத் தேவையைப் பூர்த்தி செய்யும் வருமான மூலங்களாக கொள்ளப்பட்டன. இதனால் அவை சார்ந்த நுணுக்கங்களை ஏனைய சமூகங்களுக்கு விரிவுபடுத்தாமல் குறித்த குழுமத்திற்குரியதாக பேணுவதில் ஆர்வமுடையவர்களாக விளங்கினர். இன்னொரு நிலையில் பறைமேளக் கூத்து, தப்பு ஆட்டம் போன்ற கலை வடிவங்கள் சமூகத்தின் கீழ்நிலையில் உள்ள சாதியினருக்குரியதாக அமைந்திருந்தது. இந்த கலைவடிவங்களை கையில் வைத்திருந்த இந்தச் சமூகத்தினர் இக்கலைவடிவங்களின் நிகழ்த்துகையின் மூலம் கிடைக்கும் வருமானத்தின் மூலமே அவர்களின வாழ்வாதாரத்தை மேற்கொள்ளவேண்டியிருந்தது. இவர்கள் வேறு தொழில்களில் ஈடுபட முடியாத விதத்தில் சமூக இறுக்கம் கட்டுப்படுத்தியது. கிராமியக் வாழ்வு கலைப் பயிலவின் மூலம் சாதிரீதியாக மக்களை அடையாளப்படுத்தும் தன்மையுடையதாகவு அமைந்திருந்தது என்பதை இது உணர்த்துகின்றது. சில கலையடையாளங்கள் உயர்ந்த அடையாளங்களாக அமைய சில இழிவான அடையாளங்களாக அமைந்திருந்தன.

கிழக்கிலங்கையின் சமூக இயக்கத்தில் முக்கிய இடம்பிடித்த கலைவடிவங்களாக வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் அமைந்திருந்தன. பருவகால உற்பத்தியாக கிழக்கிலங்கை மக்களின் பொருளாதார ஈட்டம் அமைந்திருந்தால் பொருளாதார செயற்பாடுகளில் இருந்து ஓய்வாக இருக்கும் காலங்கள் பாரம்பரிய சமூகங்ளில் இந்த கலைச் செயற்பாடுகளுக்குரிய காலமாக அமைந்திருந்தன. பாரம்பரிய கலைப்பயில்வும் அம்மக்களின் குலதெய்வத்திற்கான சடங்கு வழிபாடும் கோயில் சூழலிலேயே நடைபெற்றன. கூத்துக்கள் நடைபெறும் காலங்களும் சடங்குகள் நடைபெறும் காலங்களும் ஒன்றாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. ‘‘கன்னன்குடாவிலும் அதனை அண்டிய சில பிரதேசங்களிலும் ஏனைய பிரதேசங்களைவிட கூத்தில் அதிக அக்கறை காட்டப்பட்டுவது விசேட அம்சமாகும். இதற்கு அடிப்படைக் காரணம் அங்கு அமைந்துள்ள கண்ணகியம்மன் ஆலையத்தோடு மிகநெருங்கிய தொடர்புடைய கலை நிகழ்த்துகையையாக கூத்து அமைந்திருப்பது’’ (சந்திரசேகரம்,சி.,2016:53) என சடக்கிற்கும் பாரம்பரிய கலை நிகழ்த்துகைக்கும் இடையேயான பிணைப்புச் சுட்டிக்காட்டப்படுகிறது.

நகரவாழ்வு பாரம்பரிய மரபுகளில் பாதிப்பை ஏற்படுத்தியது போன்று கலை, கைப்பணிச் செயற்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாரம்பரிய கைவினை உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு மாற்றீடாக நகரச் சந்தையில் இறக்குமதிப் பொருட்களும் கம்பனி உற்பத்திப் பொருட்களும் ஆக்கிரமிக்கின்றன. புதிய உற்பத்திப் பொருட்களை குறைந்த விலைக்கு மக்கள் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்புக்கள் அங்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாக தனது குலதெய்வ வழிபாட்டின் முகக்களை, அம்மானைக்காய், சிலம்பு, ஆயுதங்கள் போன்ற வெண்கலத்தாலான பொருட்களை காலங்காலமாக செய்து வழங்கிய பொற்கொல்லனை நாடிச் செல்லவேண்டிய தேவை நகரச் சூழலில் இல்லாமல்பொகின்றது. சடங்குப் பொருட்களை விற்பனை செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள ஒரு விற்பனை நிலையத்தில் இருந்து அப்பொருளை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புக்களை நகரச் சந்தை ஏற்படுத்திக் கொடுத்தது. கிழக்கிலங்கையில் ஓந்தாச்சிமடம், ஏறாவூர், போரதீவு போன்ற கிராமங்களில் பாரம்பரிய வெண்கலப்பொருட்களின் உற்பதியை குடிசைக் கைத்தொழிலாக (குடும்ப உற்பத்தி) மேற்கொண்டனர். பாரம்பரிய உற்பத்தியாளர்களால் கம்பனி உற்பத்திப் பொருட்களைவிட குறைந்த விலைக்கு அவர்களால் உற்பத்திசெய்யப்படும் பொருட்களை விற்கமுடியாதிருந்தது. இதனால் பாரம்பரிய உற்பத்திக்கு இருந்த கேள்வி வீழ்ச்சியடைந்தது. பாரம்பரிய உற்பத்தியாளர்கள் உற்பத்திக்கு எடுக்கும் பிரயத்தனம், காலம், தரம் என்பன விலைக்குறைப்பு செய்யமுடியாதவிதத்தில் அவர்களை கட்டுப்படுத்தியது. கம்பனி உற்பத்தியளாகளைப் போன்று பாரம்பரிய உற்பத்தியாளர்கள் நவீன ரக இயந்திரங்களைப் பயன்படுத்தி கம்பனி உற்பத்திக்குப் போட்டியாக உற்பத்தியை மேற்கொள்வதற்குரிய நவீன இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கான பொருளாதாரபலம் இல்லாதிருந்தனர். இன்னொருநிலையில் நகரச் சந்தை விற்பனையாளர்களால் பாரம்பரிய உற்பத்தியாளாகளின் பொருட்களை கொள்வனவு செய்யமுடியாதவிதத்தில் பாரம்பரிய உற்பத்தியின் விலை அதிகமாக இருந்தது. இவ்வாறான காரணங்களால் பாரம்பரிய வெண்கல உற்பத்தியாளர் காலம்காலமாக மேற்கொனள்ளப்பட்டு வந்த தொழிலை கைவிடவேண்டி / இழக்கவேண்டி ஏற்படுகிறது. நகரச் சந்தை பாரம்பரிய கைத்தொழிலின் வீழ்ச்சிக்கு காரணமாகின்றது. இதுபோன்று கிழக்கிலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவந்த பல்வேறு கைப்பணி மரபுளும் பாதிக்கப்பட்டன.

பாரம்பரிய உற்பத்தி போன்று பொருட்களின் தரம் அமையாதபோதும் குறைந்த விலைக்கு தாம் விரும்பியவுடன் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான வசதியை நகரச் சந்தை நுகர்வோருக்கு வழங்கியது. நகர சந்தையில் நுகர்வோர் அடையும் குறிப்பிடத்தக்க நன்மையாக இது அமைகின்றது.

கைப்பணி மரபு போன்று நிகழ்த்துகலைகளும் நகரமயமாக்கத்தால் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. பாரம்பரிய வாழ்க்கைச் சூழல் நகரமயமாக்கத்தால் மாற்றமடைவதால் பாரம்பரிய நிகழ்த்துகலைகளை பாரம்பரிய சூழலில்

நிகழ்த்துவதற்கு மக்களால் முடியாது போகின்றது. புதிய வாழ்க்கைச் சூழலில் நகரத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவாகிய மத்திய தரவர்கத்தின் தோற்றம் குறிப்பிடத்தக்க அம்சமாகும். அரச உத்தியோகம் மற்றும் ஏனைய நகரத்தை மையப்படுத்திய தொழில்களினால் மேன்நிலையடைந்தவர்கள். நகரமயமாக்கத்தின் பாதிப்பால் பல கிராமங்களில் பாரம்பரிய சமூகச் சூழல் மாற்றமுற்றிருந்தது. இதனால் பாரம்பரிய சூழலில் நிகழ்கலைகளை நிகழ்த்துவதற்கான வாய்ப்பை அனேகமான கிராமங்கள் இழக்கின்றன.

கிழக்கிலங்கையில் பயிலப்படும் நிகழ்த்துகை வடிவங்களில் கூத்துக்கலை குறிப்பிடத்தக்கதொரு வடிவம். கூத்துக்கலை செழிப்பாகப் பயிலப்பட்டுவந்த பல கிராமங்களில் கூத்தின் வீழ்ச்சியை அவதானித்த சு.வித்தியானந்தனின் கூத்தை நகரப் பார்வையாளர்களின் தேவைக்கேற்ப வழங்கும் போதே கூத்தை தொடர்ந்து உயிர்ப்புடன் பாதுகாக்கமுடியும் எனக் கருதினார். இக்கட்டத்தில் ஐரோப்பிய அரங்கப் பண்புகளைக் கொண்டதாக கூத்தினை வடிவமைக்க முயற்சிக்கின்றார். வித்தியானந்தனின் இந்த கூத்துச் செயற்பாட்டிற்கு முன்னுதாரணமாக இருந்தது பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திரவின் தேசிய அரங்கச் செயற்பாடுகள் (மௌனகுரு,சி.,1997:14). இதற்காக அவர் ஏற்படுத்திய மாற்றங்களில் அடிப்படையானது கூத்தை படச்சட்ட அரங்கில் அளிக்கை செய்யத்தக்க வடிவமாக மாற்றியமைத்ததாகும்.

அன்று பலமாக இருந்த நகரவாசிகளான மத்தியதர வர்க்கத்தினரை நோக்கி கூத்தை கொண்டு செல்லும்போது அதனை உயிர்ப்புடன் பேணலாம் என சு.வித்தியானந்தன் சிந்தித்தார். இதனை ‘‘செம்மைப்படுத்தப்பட்ட கூத்துக்கள் மூன்றுபக்கமும் அடைக்கப்பட்டதும் நவீன ஒலி, ஒளி, ஆசனம் கொண்டதுமான நவீன அரங்குகளில் படித்த மத்தியதர வகுப்புக்கு கொண்டுவரப்பட்டன. அவர்களால் இந்நாடகங்கள் வெகுவாக இரசிக்கவும்பட்டன (வித்தியானந்தன்,சு.,1990:57) எனக் குறிப்பிவார்.

வித்தியானந்தனின் நகரப் பார்வையாளர்களுக்காக கூத்தை மாற்றியமைத்த செயற்பாடானது கூத்தை காலங்காலமாக அளிக்கை செய்து சொந்தம் கொண்டாடிய பாரம்பரிய சமூகத்திலிருந்து பிரித்தெடுத்து நகரப் பார்வையாளர்களுக்கான பொதுவான வடிவமாக மாற்றியமைப்பதாக அமைந்திருந்தது. இங்கு கூத்தில் ஆர்வமுள்ள திறமையுள்ள எவரும் கூத்துச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகக்ள் திறந்துவிடப்பட்டிருந்தது. இதன்போது பாரம்பரிய கூத்தில் முக்கிய ஆளுமையாக விளங்கிய அண்ணாவி (கூத்து வாத்தியார்) பின்தள்ளப்படுகின்றார். பாரம்பரிய சமூகத்தில் கூத்தின் உருவாக்கத்திற்கான அடிப்படையாகவும் சமூகத்தின் முக்கிய ஆளுமையாகவும் மதிக்கப்பட்டவர் அண்ணவி. புதிய அரங்கச் சூழலில் இன்னொருவரின் கருத்திற்குக் கட்டுப்பட்டு அவர் கலைச் சேவை புரியவேண்டியிருந்தது. இதனை வித்தியானந்தனே உறுதிசெய்கின்றார்.

‘‘வட்டக்களிரியிலும், திறந்தவெளியிலும் மத்தளத்தை ஓங்கி அடித்து சுதந்திரமாகப் பாடிய அண்ணாவியாரின் அருகே நின்று அடிக்கடி கையைப் பிடித்து மெதுவாக அடிக்கச் சொல்லவேண்டி வரும். நாடகம் தொங்கியதும் அண்ணாவிக்கு அருகே நின்று அந்தப் பணியை எப்போதும் செய்வேன்’’ (1990:56). இங்கு அண்ணாவி கூலிக்கு சேவை செய்யும் பணியாளனாகவும் கூத்தின் கலையாக்கத் தீர்மானங்கள் நகரத்தில் இருக்கும் ஒரு பொதுவருக்கும் கைமாறுகின்றது. அளிக்கையில் மேன்மைபெற்றிருந்த சமூகம் சார்ந்த பல்வேறு அம்சங்களும் பின்தள்ளப்பட்டு அளிக்கை மாத்திரம் படச்சட்ட அரங்கின் காட்சிப் பொருளாகின்றது. சமூகத் தொடர்பாடல் என்பது இங்கு இல்லாமல் போகின்றது. இக்கட்டத்தில் பாரம்பரியக் கலையின் அளிக்கை சார்ந்த அம்சங்களில் சிறந்தனவற்றை எடுத்து அளிக்கை செய்தல் என்பது பிரதானம் பெறுகின்றது.

இந்தச் செயற்பாடுகள் யாவும் புதிய நகர வாழ்வினாலும் அதனுடன் தொடர்புடைய சமூக மாற்றத்தினாலும் வீழ்ச்சியுற்ற கூத்தை உயிர்ப்புடன் பேணவேண்டும் என்னும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டவை. நகரை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட வாழ்வு காலச் சக்கரத்துடன் தொடர்புடைய ஓய்வற்றதொன்றாக அமைந்திருந்தது. இந்த வாழ்க்கை சுழலில் உள்ள மக்களுக்கு் இரவுமுழுவதும் இருந்து கூத்தைப் பார்ப்பதற்கான அவகாசம் இருக்கவில்லை. இதனால் நரக அரங்கில் நேரம், அளிக்கைக்களம், அளிக்கை செய்யப்படும் காலம் என்பனவற்றில் மாற்றம் கொண்டுவந்தனர். கூத்தின்பால் நகர பார்வையாளர்களின் ஆர்வத்தைத் தூண்ட நவீன நாடகத்தின் கூறுகளையும் இணைத்தனர். இச்செயற்பாடுகள் பாரம்பரியமாக ஒரு குழுமத்திடம் இருந்த கூத்தை நகர சமூகத்தில் சகலரும் பங்குபற்றக்கூடிய பொதுவான வடிவமாக மாற்றியமைக்கின்றது.

இக்கட்டத்தில் கூத்து பல்கலைக்கழகங்கள், தனிப்பட்ட கலைஞர்கள், நிதிவழங்கள் நிறுவனங்கள், சர்வதேச நிதி நிறுவனங்களின் அனுசரனையுடன் அளிக்கை செய்யப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் கூத்துடன் தொடர்புடைய பாரம்பரிய திறனாளிகள் தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் புதிய தயாரிப்பாளர்களால் திறன்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு அதற்குகூலி வழங்கப்படுகின்றது. இருந்தும் கூத்தின் வருமான ஈட்டத்தில் அவர்களால் பங்கெடுக்க முடிவதில்லை. அதற்கான கல்வித்தராதரம், செல்வாக்கு இவர்களுக்கில்லாமை இதில் தாக்கம் செலுத்துகின்றது. பாரம்பரிய கலைஞர் பாரம்பரிய சமூகத்தில் அவர்களுக்கு இருந்த பொருளாதார, சமூக நிலவரங்களில் இருந்து கீழ்நிலைக்குச் செல்கின்றனர். கூத்தைக் கையில் எடுத்த புதிய தலைமுறையினர் உயர்வு பெறுகின்றனர். இங்கு நகரமயமாக்கத்தின் பின்னர் பொருளாதாரச் செயற்பாடுகள் கிராமத்தில் இருந்து நகரத்தில் மையம் கொள்கின்றன (ஜெயசங்களர்,சி.,2011:25). நகர சமூகத்தில் கூத்து வியாபாரப் பண்டமாக்கப்பட்டு பாரம்பரிய கலைஞர்களிடம் இருந்து கைநழுவிப் போகும் நிலையை புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை நினைத்து இவ்வாறு ஏக்கம் கொள்கின்றார். ‘‘இன்று நாட்டுக்கூத்துக்கள் பெரும்பாலும் கல்வியறிவில்லாதவர்களின்

கையிலே, பிழைப்புக்காகக் கூத்தாடுபவர்களின் கையிலே அகப்பட்டு இன்னும் தரங்குறைந்து போவதைக் காண மனம் மிகவும் வருந்துகின்றது'' (கந்தையா,வி.சீ., (பதி),1969:07).

பாரம்பரிய கலைச்செயற்பாட்டை சமகாலத்தில் முன்னெடுத்தல் தொடர்பாக சி.ஜெயசங்களர் பின்வருமாறு குறிப்பிடுவார். ''பாரம்பரிய சிந்தனைப் போக்குடன் போரடுவதும், புதிய நிலைமைகளைப் புரிந்துகொள்ள முனைவதும், உணரவைப்பதும், அவைகளுக்காகவும் அமைப்பை ஆற்றலை பாரம்பரிய அரங்கு கொண்டிருக்கின்றது என்பதை அரங்கியல்ரீதியாக விளங்கிக் கொள்ளவைப்பதும், நிகழ்கால அனுபவங்களை முழுமையாக வெளிப்படுத்துவதும், சாத்தியப்பாடுகளைப் பற்றிச் சிந்திப்பதும், செயல்முறை அனுபவங்களுக்கு வருவதுமான ஒரு தொடரான நடைமுறையை மேற்கொள்வதே அவசியமானது'' (2011:20). இவ்வாறானதயார்படுத்தில் பாரம்பரிய கலைஞரின் நிலைப்பாடு என்ன என்பதில் தான் இச்செயற்பாட்டின் தொடர்ச்சி தங்கியுள்ளது.

## முடிவுகளும் பரிந்துரைகளும்

நகரமயமாக்கம் பாரம்பரிய மரபுகள், பண்பாடு, பொருட்கள், கலைப் பயில்வு, கல்வி என்பன இருந்த இடத்தில் நவீன பொருட்களையும், சிந்தனையையும் வாழ்க்கை முறையையும் அறிமுகப்படுத்தியது. நகரமயமாக்கத்தால் பாரம்பரியமாக சமூகத்தால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த விடயங்கள் மாற்றத்திற்கு உள்ளாகின்றன. பாரம்பரிய சமூகத்தில் ஒரு பிரிவினர் பலமான சமூகச் சக்தியாகவும் இன்னொரு பிரிவினர் அடிமைச் சாதியாகவும் இருந்த நிலைமையில் தளர்வு ஏற்படுகிறது. கீழ்நிலைச் சாதியாக ஒதுக்கப்பட்டோர் சுதந்திரமாகச் செயற்பட முடிகின்றது.

சாதியுடனும் பாரம்பரிய சமூக வாழ்வுடனும் இரண்டறக் கலந்திருந்த கலைவடிவங்கள் பொதுமைப்படுத்தப்படுகின்றன. அப்போது கலைவடிவங்களை பொருளாதார ஈட்டமூலமாகக் கொண்டிருந்தோர் பாதிப்புறுகின்றனர். இது கூடுதலாக கைப்பணிக் கலைகளையே பாதிக்கின்றது. இருந்தும் அவர்களின் இளந்தலைமுறையினர் நகர பொருளாதார முறைமைக்கமைய வளர்த்துக் கொள்ள முயற்சிக்கின்றனர். நிகழ்கலைகள் நகர வாழ்வில் பொதுமைப்படுத்தப்படுவதால் கலைக்கிருந்த சமூக முக்கியத்தவம் இல்லாமல் போய் அது ஒரு அளிக்கை வடிவமாக மாத்திரம் மாறுகின்றது. நகரச் சூழலில் பாரம்பரிய கலைஞர்கள் அவர்களின் கலையுரிமத்தை இழக்கின்றனர். புதிய வாழ்க்கை சூழலில் அதன் பயில்வில் மாற்றங்களை ஏற்படுத்தி சமூகத்திற்கான ஒரு வடிவமாக முன்னெடுப்பதற்கான நோக்குநிலை அவர்களிடம் இல்லாதிருந்தது அல்லது மாற்றத்தை ஏற்படுத்த விரும்பாதது முக்கிய பிரச்சினையாக அமைகின்றது.

நகரமயமாக்கம் காரணமாக பாரம்பரிய சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி விவாதிக்கும்போது நன்மை, தீமை ஆகிய இரண்டும் எதிர்நிலையில் ஏற்படுகின்றன. ஒரு பிரிவினருக்கு நன்மையான விடயம் இன்னொரு பிரிவினருக்கு தீமைகளை ஏற்படுத்துகின்றது. நவீன தொழில்நுட்பத்தின் அறிமுகம், கல்வி வளர்ச்சி என குறிப்பிடத்தக்க நன்மைகள் சுட்டிக்காட்டப்பட, பாரம்பரிய சமூக இயக்கத்தை சீர்குலைத்தமை, பாரம்பரிய கலை, பொருளாதார ஈட்டங்கள் பாதிக்கப்பட்டமை என தீமைகளை அடுக்கிக் கொண்டு செல்லலாம். நகர வாழ்வை எதிர்கொள்வது தவிர்கமுடியாதது. அந்த எதிர்கொள்ளலில் சமூகங்கள் அடையாளங்களை தக்கவைத்துக் கொள்வதற்கான அடிப்படைகளை கண்டறிந்து அதற்கேற்ப செயற்படுவது பயனுடையதாகும்.

## உசாத்துணைகள்


கணபதி,வை. (2001). சிற்பச் செந்நூல், தமிழ்நாடு - சென்னை: தொழில்நுட்பக் கல்வி இயக்கம்.

கந்தையா,வி.சீ. (பதி) (1969). இராமநாடகம் வடமோடிக் கூத்து, மட்டக்களப்பு : மட்டக்களப்பு பிரதேச கலா மன்றம்.

குணசிங்கம் முருகர். (2016). இலங்கையில் தமிழர் - ஒரு முழுமையான வரலாறு, அவுஸ்திரேலியா: எம் வி வெளியீடு, தென் ஆசியாவின் மையம் - சிட்னி.

சந்திரசேகரம்,சி. (2016). 1980 இல் இருந்து ஏற்பட்ட மாற்றமும் மட்டக்களப்புக் கூத்தின் இருப்பும்'', நெய்தல், வசந்தாறுமூலை: கிழக்குப் பல்கலைக்கழகம்.

சிவசுப்பிரமணியம், ஆ. (2017). காலனியமும் கச்சேரித் தமிழும், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். புஷ்பரட்ணம்,ப. (2017). *இலங்கையில் தமிழர் : ஒரு சுருக்க வரலாறு*, சுவிற்சர்லாந்து: தமிழ்க் கல்விச்சேவை.

முத்தையா,இ. (2010). அடித்தள மக்கள் தொடர்பான பண்பாட்டுச் சொல்லாடல், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

மௌனகுரு,சி., (1997). பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திராவும் ஈழத்து நாடக மரபும், ராஜகிரிய: விபவி மாற்றுக் கலாசார மையம்.

வித்தியானந்தன், சு. (1990). *நாடகம் நாட்டாரியற் சிந்தனை,* தெல்லிப்பளை: தமிழகம் வெளியீடு.

ஜெயசங்கர்,சி. (2011). கூத்து மீளுருவாக்கம், மது